O.S.No. 208-2012
16.09.2021

பி.வா.சா.1. திரு.விஜயபாபு.த.பெ.செல்லத்துரை

பிரதிவாதிகள் 22 முதல் 24 வரை தரப்பு குறுக்கு விசாரணை

22 முதல் 24 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா. 1 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், பி.வா.சா.-1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததாலும், அவர்கள் தரப்பில் எந்த பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், பிரதிவாதிகள் 22 முதல் 24 வரையான தரப்பின் பி.சா.வா. -1 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஆதியில் வள்ளியப்ப செட்டியாருக்கு பாததியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கில் 2 இலக்க சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் காட்டப்பட்டுள்ள நான்கு மால் சரிதான் என்றால் ஆம். வள்ளியப்ப செட்டியாரிமிடருந்து வாதியின் தகப்பனார் கருத்தான் அம்பலம் உழவடை செய்து வந்தார் என்றால் சரியல்ல. கருத்தான் அம்பலம் உழவடை செய்யவில்லை என்பதை எதை வைத்து சொல்கிறேன் என்றால் கருத்தான் அம்பலத்தின் இளைய மகன் செல்லையா பெயரில் உழவடை பட்டா இருந்தது, அதனால் அதை வைத்து சொல்கிறேன். கருத்தான் அம்பலத்தின் வாரிசுகள் எத்தனை பேர் என்றால் நான்கு, என் தாத்தா தொத்தன், 2 வது தாத்தா செல்லையா, 3 வது என் ஆயா அழகம்மாள், 4 வது வாதி பரமசிவம். 5 வது வாரிசு அருவுகம் அவர் இறந்து விட்டார். தொத்தான் என்ற மச்சக்காளை இறந்து விட்டார் என்றால் சரிதான். அவருக்கு யார் வாரிசு என்றால் என் தந்தை செல்லத்துரை, மற்றும் வசந்தா, போதும்பொண்ணு. செல்லையா 1980 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். செல்லையாவிற்கு மந்தைச்சாமி, கலையரசி, செல்வம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மந்தைச்சாமி 2003 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். மந்தைச்சாமிக்கு முத்துலெட்சுமி, கருணா, துர்கா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். (வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.-1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)